# நவரத்தினம்



# நினைவு மலர்

15.09.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



உசனைப் பிறப்பிடமாகவும் மீசாலை,

கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கந்தையா நவரத்தினம்

(Retd. Senior Assessor- Dept.of Inland Revenue, Tax Consultant)

அவர்கள்

இறையுலகு சேர்ந்தமையை எடுத்தியம்பும்

# நினைவுமலர்

## 15.09.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பாதமலர்த் திருவடிக்கு

# சமர்ப்பணம்

பாசமான தந்தையாய்... துணைவனாய்

அன்புள்ளங் கொண்ட சகோதரனாய் ... மச்சானாய்

பரிவுடன்... இன்முகம் காட்டிடும் மாமாவாய்....

பாசத்துடன் விளையாடும் "அச்சா... அப்பாவாய்...

ஆற்றல் மிகு நண்பனாய்... வரி உத்தியோகத்தராய்

அறிவூட்டி வழிகாட்டும் அன்பு ஆசானாய்

நல்லறிவூட்டி... நல்வழிப்படுத்தி... விருட்சமாக்கி

எம்மை வளமாக வாழ வைத்து...

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த..

எம் அன்புத் தந்தை கந்தையா நவரத்தினம்

அவர்களின் புனித பாதக் கமலங்களிற்கு

இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'



**மலர்வு**
**27.06.1940**

அமரர்

**உதிர்வு**
**17.08.2012**

# கந்தையா நவரத்தினம்

அவர்களின்

## திதி நிர்ணயம்

நிகழுறுநல் நந்தனமாம் ஆவணி நாள் ஒன்றதனில்
புகழமரும் அமாவாசை திதியதுவாம் - தகவுடையான்
கந்தையா நவரத்தினமென்னும் பேரருளான்
சிந்தையிறை தானடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை

## தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேணிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடம் ஆக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன் அடியின் கீழிருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடும் முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் கந்தையா நவரத்தினம்
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

தென்மராட்சி கிழக்கில் நெல் வயலால் சூழப்பட்டு தென்னை மரச்சோலையாய் விளங்குவது உசன் கிராமம். இங்குள்ள உசன் கந்தசுவாமி கோவில் பிரசித்தமானது. கோவிலின் அயலில் அமரர் கந்தையா அவர்களுக்கும் சிவகாமியம்மை அவர்களுக்கும் 3வது மகனாகப் பிறந்தார். இவர்களுக்கு குணரத்தினம், செல்வரத்தினம், அரியரத்தினம் ஆகிய சகோதரர்கள் உள்ளனர். இவர் யா/உசன் இராமநாதன் வித்தியாலயத்தில் கல்வி கற்றார். இளமைப்பராயத்தில் இவர் திறமையான சித்திரனாகவும் சிற்பவேலைப்பாடு தெரிந்தவராகவும் விளங்கினார். அரச எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியெய்தி இறைவரித் திணைக்களத்தில் இலிகிதராக தனது சேவையை தனது 18வது வயதில் ஆரம்பித்தார்.

மீசாலைப்பதியின் சதாசிவம் உபாத்தியாயர் செல்வநாயகம் அவர்களின் சிரேஷ்ட புத்திரியாகிய இராசநாயகி அவர்களை தனது 30ம் வயதில் 1970ம் ஆண்டு திருமணம் செய்தார். திருமண வழியால் இவருக்கு இரத்தினசிங்கம், ஜெயசிங்கம், சதாலிங்கம் ஆகிய மூன்று மைத்துனர்களும் தெய்வநாயகி, துவாரகா தேவி ஆகிய மைத்துனிமாரும் அமைந்தனர். புதுமணத் தம்பதியினரின் மணவாழ்வு இவரது உத்தியோகத்தின் காரணமாக கொழும்பு நகரத்தில் ஆரம்பமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு யசோகரன், முரளிகரன், பிரபாகரன், உமாகரன், ஆகிய நான்கு புத்திரர்களும், ஐந்தாவது புத்திரியாக லதாவும் இல்லறத்தின் நற்பயனாகப் பிறந்தனர். பிள்ளைகளுடன் தாயார் தனது சொந்த ஊரில் தாயில்லத்திலிருந்து சிறுதூரத்தில் தமக்கென ஒரு புதுமனையை அமைத்து அதில் 1976 ஆவணியில் குடிபுகுந்து சிறப்பாக வாழ்க்கையைத் தொடர்ந்தனர். மீசாலை மாஞ்சோலை மாங்கனிகளும் பலா மரப்பலாப்பழங்களும் பாலும் தயிரும் தரும் காமதேனுப் பசுக்களும், தேசி மரங்களுடன் தீன்முருங்கு மரங்களுமாக, பிள்ளைகளுடன் கடும் முயற்சியுடன் பங்களா வீதியில் நவரத்தினம் குடும்பம் சிறப்புற வாழ்ந்து வந்தது.

பிள்ளைகள் அருகேயமைந்த யா/மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வி, உயர்கல்வியை யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் படித்துத் தேறினார்கள்.

இவரது மூத்த மகனான யசோகரன் அவர்கள் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் தமது பொறியியல் பட்டப்படிப்பை முடித்தார். இரண்டாவது மகன் முரளிகரன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியலாளராகத் தேறினார். மூன்றாவது மகன் பிரபாகரன் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் சிறப்பாகத் தேறி, விரிவுரையாளராய்ப் பணியாற்றிப் பின் இங்கிலாந்தில் தனது கலாநிதிப்பட்டத்தைப் பெற்றுப் பொறியியலாளரானார். நான்காவது மகன் உமாகரன் உயர்தரப் பரீட்சைக் காலத்திலேற்பட்ட நாட்டுப்பிரச்சனை காரணமாகக் குடும்பமாக இவர்கள் கொழும்புக்குச் சென்று குடியேறினர். உமாகரன் கனடா சென்று Seneca Collegeல் கற்றுத்தேறி எந்திரியானார். ஐந்தாவது பெண்பிள்ளை கெஞ்சினாலும் கிடையாதென்பர். அந்தச் செல்லப்பிள்ளையை இவர்கள் தம்முடனேயே வளர்த்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது வாழ்வு 1995 இலிருந்து 2012 வரை கல்கிசையிலும், தெகிவளையிலும் சிறப்பாகத் தொடர்ந்த இவ்வேளையில் நான்கு ஆண்மகன்களுக்கும் சிறப்பாய் திருமணம் செய்து வைத்தனர். பிள்ளைகளை சிறப்பாக வளர்த்து ஒழுக்கசீலர்களாக பண்பாட்டுடன் அவையத்தில் இருக்கச் செய்தார்.

இவர் தன்பிள்ளைகளிடம் கனடா, இங்கிலாந்து நாடுகளுக்குச் சென்று சிலகாலம் தங்கி மகிழ்ந்திருந்து அங்கு தொடர்ந்து நிரந்தரமாய்த் தங்கியிருக்க விரும்பாமல், தான் தொடர்ந்து வேலை செய்ய வேண்டும் மென்ற ஆவலில் இலங்கை வந்து, வரி ஆலோசகராகப் பணியைத் தொடர்ந்தார். தன்பிள்ளைகளுக்கு சிறப்பாக எல்லாவற்றையும் செய்து பார்த்து மகிழ்ந்திருந்தார்.

நாற்பத்தியிரண்டாண்டுகள் தன்னுடன் வாழ்ந்த தன் மனைவியாரின் விருப்பிற்கிணங்க தமது சொந்த ஊரில்... சொந்த வீட்டில் தமது இறுதிக் காலத்தை கழிக்க எண்ணி கொழும்பில் இருந்து மீசாலை வந்து வசித்து வந்தார்.

70வது வயதுவரை எம்மவருள் துடிப்புடன் திரிந்த இவருக்கு ஈரல் கரணை நோய் (Liver Cirrhosis) கண்டுபிடிக்கப்பட்டது. இதன் விளைவாக சலரோகமும் (Diabetes Mellitus) நுரையீரல் அழற்சியும் இவரை ஆட் கொண்டது. இருவருடத்துள் இந்நோய்கள் எம்மிடமிருந்து இவரைப் பிரித்தன. காலக் கண்ணாடியில் காலதேவனின் அழைப்பை ஏற்று 17.08.2012 வியாழக்கிழமை அதிகாலை 5.40 மணியளவில் தனதில்லத்தில் மனைவி, மக்கள், உறவினர் சூழ்ந்திருக்க இறையடி சேர்ந்தார்.

பெயர் சொல்ல அருமைப் புதல்வர்களை இவ்வுலகிற்கு விட்டு இறைவனடி சேர்ந்த அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தடியர் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதர் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வர் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனர்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாய்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாவின் நினைவலைகளில் சில துளிகள்

அப்பாவின் தொழில் அவரை எங்களிலிருந்து தூரத்திலேயே இருக்க வைத்திருந்தது. எங்களோடு அவர் வீட்டில் இருந்த நாட்கள் அரிது. பாடசாலைக் காலத்தில் நாம் அவருடன் வாழ்ந்தது குறைவு. ஆனால், பல்கலைக்கழகக் காலம் அந்தக் குறையைக் கொஞ்சம் நிவர்த்தி செய்தது. 1992 இற்குப் பின் நான் பொறியியற் பீடத்தில் படித்த போது அவருடன் வாழ்ந்ததால், அவரது எண்ணங்களையும் அனுபவங்களையும் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அப்போது எனக்குக் கிடைத்தன.

உசன் இராமநாதன் வித்தியாலயத்தில் அவர் படிக்கும் காலத்தில், ஈச்சம் காட்டு தோட்டத்தில் மிளகாய், புகையிலைக்கு துரவில் இருந்து பனையோலைப் பட்டை மூலம் தண்ணீர் இறைத்து விட்டு பள்ளிக்கூடத்திற்கு பிந்திப் போய் சிற்றம்பலம் வாத்தியாரிடம் அடி வாங்கிய கதைகள், உசன் கந்தசாமி கோயில் திருவிழாவின் நினைவுகள், இரவில் சாவகச்சேரிக்கு நடந்தே போய் தியேட்டரில் படம் பார்த்த மகிழ்வுகள், 1977,81,83 களில் நடந்த தமிழர் எதிர்ப்புக் கலவரங்களில் தப்பிப் பிழைத்த வலிகள், வேலையில் வரிக் கணக்குகளை பார்க்கும் போது வரும் சிக்கல்களைக் கையாண்ட பெருமைகள் என்று வாழ்வுக்கு வழிகாட்டும் நல்லுரைகளை அவர் என்னோடு பகிர்ந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதுமே அப்பா கொழும்பில் வேலை செய்ததால், வெளி நாடுகளுக்குச் செல்கின்ற எம் சொந்தங்கள் அனைவரும் அப்பாவிடம் சென்று தங்கியிருந்து ஒழுங்குகள் செய்துதான் வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். எல்லோரையும் அனுப்பி வைத்த அப்பா, தான் போகவில்லை. ஏனென்றால், தனது அரவணைப்பும் ஆலோசனைகளும் இல்லையென்றால், தன் பிள்ளைகள் நல்வாழ்விலிருந்து திசை மாறிப்போய் விடக்கூடும் என அவர் கருதினார். சிறுவயதில் நாம் படிக்காமல் குழப்படிகள் செய்து திரியும் நேரங்களில், அப்பா அடிக்கடி கேட்பார் - " நீ படிக்கப் போறியோ, இல்லாட்டில் தட்டுவங்கொட்டி வயலுக்குப் போய் மாடு மேய்க்கப் போறியோ" யோசித்து விட்டு, படிப்பதாய் தீர்மானித்தேன்! 'படி, படி" என்று ஒவ்வொரு நாளும் ஊக்கப்படுத்துவார் அம்மா. எமது பரீட்சைக் காலங்களில் எப்பாடுபட்டாவது அப்பாவும் வீட்டிற்கு வந்து விடுவார். நாம் படிப்பதற்குத் தேவையான சௌகரியங்கள் அனைத்தையும் அவர் செய்வார். வீட்டிற்குள் இருந்து படிக்க வெக்கையாதலால், நான் எமது மாட்டுக் கொட்டிலுக்குள் இருந்துதான் படிப்பதுண்டு. நான் மாட்டுக் கொட்டிலடியில் இருந்து படிப்பதைக் கண்டுவிட்டால், அடுத்த நாளே அவ்விடம் முழுவதையும் துப்பரவாக்கிக் கோயில் மாதிரி ஆக்கிவிடுவார்... 2 மணித்தியாலத்திற்கு ஒருக்கால், படிக்கிற பொடியனிற்கு தேனீரும் வரும்.

படிப்பைத் தவிர வேறு வேலையொன்றும் எனக்கிருக்காது. வேறு வேலைகளை அப்பா என்னிடம் எதிர்பார்க்கவில்லை. நான் படித்தே ஆக வேண்டும். படித்தேன். தம்பிமாருக்கும் அதே நிலை தான். பாடசாலைத் தவணைப் பரீட்சைகள் முதல், க. பொ. த பரீட்சைகள் வரை, நல்ல பெறுபேறுகளை நாம் எடுத்தால் பரிசுகள் வழங்கி எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கப்படுத்துவார். நான் முதலில் அணிந்த ஜீன்ஸிலிருந்து, ஏசியா சைக்கிள், எங்கள் வீட்டு வானொலி, தொலைக்காட்சிப்பெட்டிகள் வரை அனேகமான எல்லாமே, இப்படிப்பரிசாகக் கிடைத்தவைதான். நல்லவற்றைப் பாராட்டுகின்ற இவ்வாறான வளர்ப்புமுறை தான், எங்கள் அனைவரையும் பொறியியற்பீடம் வரை கொண்டு சென்றது.

நாம் கொழும்பில் இருந்தகாலம் குண்டுவெடிப்புகள், கைதுகள், காணாமல் போதல்கள் நிறைந்த காலம். நான்கு இளம் பொடியளை கொழும்பில் வைத்துக் கொண்டு ஏதேனும் நடந்து விடுமோ என்று யோசிப்பார், பயப்பிடுவார். எந்த ஒரு தகப்பனுக்கும் இருந்துவிடக்கூடிய இயல்பான கலக்கம். நீண்ட கால இந்த உளவியற் தாக்கமும், நெடுங்காலக் கொழும்புக் கடைச் சாப்பாடும் அவருக்கு காலனாய் அமைந்தது.

எல்லா வகையிலும் ஆரோக்கியமான ஒரு வாழ்வை எமக்குத் தர, தனது ஆரோக்கியத்தை அவர் கவனிக்காது விட்டுவிட்டார். இது ஈரல் அழற்சி நோய்க்கு வித்திட்டது நோய் இனங்காணப்பட்டு இரண்டு வருடங்களுக்கு உள்ளேயே, அவரை அது எம்மிடமிருந்து பிரித்து விட்டது. ஆனால், எங்களுக்காக அவர் உருவாக்கித் தந்த எங்கள் வாழ்வில், அவர் தான் வாழ்கிறார்.

**என்றும் அவரின் நினைவுகளுடன் வாழும்**

**அன்பு மகன் யசோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் நவரத்தினமும் இறைவரிச் சேவையும்

அருள்மழை பொழிந்திடும் காக்கும் தெய்வமாம் கந்தவேள் ஆலயத்தை திருத்தலமாகக் கொண்ட உசன் என்ற நற்கிராமத்தில் திரு.கந்தையா திருமதி.சோமசுந்தர சிவகாமி அம்மையாருக்கு 1940 இல் அவதரித்த நவரத்தினம் என்ற நற்பண்பாளர் பிறந்த மண்ணின் மைந்தர்கள் பலரை உருவாக்கி உயர்த்தி விட்ட உசன் இராமநாதன் வித்தியாலயத்தில் கல்வியை முடித்திருந்த வேளையில் எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்து உறவினர்கள், உற்றார்கள், நண்பர்கள் ஆசியுடன் 1959ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் ஓர் எழுதுவினைஞராக அரச சேவையை ஆரம்பித்தார். துடிப்புள்ள இளைஞராக வலம் வந்த அமரர் நவரத்தினம் தகுதிகாண் பரீட்சைகளில் சித்தியடைந்து, எழுதுவினைஞர் சேவையின் உயர்தரங்களுக்கு உயர்த்தப்பட்டார். உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சேவையானது ஓர் தொழிநுட்ப சேவை என்ற அடிப்படையில் ஓர் தரம் வாய்ந்த இறைவரிச் சேவையாக 1974ல் உருவாக்கப்பட்ட பொழுது அத்திணைக்களத்தில் சேவையாற்றிய ஊழியர்களைப் பரீட்சை ஒன்றின் மூலம் வரி உத்தியோகத்தர்களாக உள்வாங்கிய பொழுது அமரர் நவரத்தினம் அவர்களும் ஓர் வரி உத்தியோகத்தராக நியமனம் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையே கண்ணாக இருந்த நவரத்தினம் அவர்கள் அலுவலக விடயங்களை உரிய நேரத்தில் செய்து முடிக்கின்ற அவரது ஆற்றலும் திறமையும் சக ஊழியர்களிடம் பழகுகின்ற அவரது இயல்பும் மேலதிகாரிகள் உட்பட சகல ஊழியர்களையும் அன்பால் இழுத்தது மல்லாது அவர்களின் அன்புக்கும் பாராட்டுதல்களுக்கும் உரியவரானார்.

சிரேஷ்ட வரி உத்தியோகத்தராக நிர்வாக கடமையில் அவர் இருந்த பொழுது தனக்கு கீழே கடமை புரிந்த ஊழியர்களுக்கும் தனது மேலதிகாரிகளுக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்ட வேளையில் அவர் இடை நடுவராக விடயங்களை கையாண்ட விதங்களும் அவற்றை சுமுகமாக தீர்த்து வைப்பதற்கு அவர் பின்பற்றிய நடைமுறைகளும் வழி வகைகளும் பலராலும் பாராட்டப்பட்டது.

கடமையை மிகக் கண்ணியமாகவும் செய்யும் தொழிலை தெய்வமாகவும் போற்றி வந்த அமரர் நவரத்தினம் அவர்களுக்கு உயர் பதவியான வரிமதிப்பாளர் என்னும் பதவி 1990ல் அவரை தேடி வந்தது. வரி பற்றிய விடயங்களை கற்கின்ற பொழுது வரிச் சட்டங்களை மிக நுட்பமாக ஆராய்ந்து, பகுத்தறிந்து பிரச்சினைக்குரிய விடயங்களுக்கு நுட்பமாக மிக தெளிவாக விளக்கங்களை கொடுத்து தனது கருத்துக்களை வாதங்களை முன்வைப்பதில் வல்லுநராக இருந்தார். வரி பற்றி அவருக் கிருந்த அறிவும் ஆற்றலும் விடயங்களை கையாள்வதில் அவருக் கிருந்த திறமையும் மதிநுட்பமும் உயர்அதிகாரிகள் பலரையும் கவர்ந்தமையால் நவரத்தினம் அவர்களை தமது பகுதியில் கடமையாற்றும்படி வேண்டிக் கொண்ட பல சந்தர்ப்பங்கள் உண்டு.

1998ம் ஆண்டு முதன்முறையாக இலங்கையில் பொருட்கள் சேவைகள் வரியினை அறிமுகம் செய்தபோது அவ்வரி பற்றி அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் அவர்களுக்கு இருந்த தெளிவான அறிவாற்றல் காரணமாக அவ்வரி சம்பந்தமாக அறிமுக நிகழ்வுகள் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதற்காக உருவாக்கப்பட்ட அறிஞர் குழாமில் நவரத்தினமும் ஒருவர். பெறுமதி சேர் வரி என பின்னர் மாற்றம் பெற்ற பொருட்கள் சேவை வரிப்பிரிவில் கடமையாற்றிய பொழுது சிரேஷ்ட வரி மதிப்பாளர் ஆகி 2000 ஆண்டில் அரசசேவையில் இருந்து ஓய்வுபெற்றார்.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் பல வரி ஆலோசனை நிறுவனங்கள் அவரது சேவையை நாடி நின்ற பொழுதும் ஓய்வு பெற்ற வரி மதிப்பாளரும் வரி ஆலோசகரும் சட்டத்தரணியுமான திரு.குணசிங்கம் அவர்களுடன் தனது வரி பற்றிய அறிவினைப் பகிர்ந்து கொண்டு பல வருடங்கள் சேவையாற்றினார். அமரர் நவரத்தினம் அவர்களைத் தேடி "ஹைட்ராமணி" குழுமத்திடமிருந்து வரி ஆலோசகராக கடமையாற்றும்படி வந்த அழைப்பை ஏற்று அக் குழுமத்தின் வரி ஆலோசகராக 2006ல் பதவியை ஏற்றுக் கொண்டார். வரிபற்றிய பரந்துபட்ட தனது அறிவினையும் ஆற்றலையும் "ஹைட்ராமணி குழுமத்துக்கு" வழங்கியதன் மூலம் அக்குழுமத்தின் இலாபம் ஈட்டும் செயல்திறனை நிமிர்த்தி உயர்த்தினார்.

இவ்வாறு தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தவரை தாக்கிய நோய் அவரை நிரந்தரமாகவே கட்டிலில் கிடத்தியதே தவிர அவர் மீண்டும் மீட்சி பெற்ற மனிதராக வீறுநடை போட இடமளிக்கவில்லை.

நோயினால் கட்டிலில் வீழ்த்தப்பட்டாலும் கூட அவரது நகைச் சுவை பேச்சுக்கள் குறைந்ததுமில்லை வரி ஆலோசனைச் சேவைகள் நின்றது மில்லை. கட்டிலில் இருந்தவாறே பல்வேறு பிரபல நிறுவனங்களுக்கு வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைகளை வழங்கினார். நோயுற்றிருந்தும் அவரது வரி பற்றிய அறிவும் ஆற்றலும் குறைந்ததே இல்லை என்பதை அவருடனான உரையாடல்கள் மூலம் நான் கண்டு கொண்டேன். இவரின் பிரிவு இவரின் குடும்பத்துக்கு மட்டுமல்ல இவரின் சேவையைப் பெற்ற சகலருக்குமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இது இயற்கையின் நியதி. இதனை நாம் உணர்வோம். பிரார்த்திப்போம். அமரர் நவரத்தினத்தின் ஆன்மா சாந்திய டைவதாக.

**ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!**

**க. இராசரத்தினம்**
**வரி ஆலோசகர்,**
**ஓய்வு பெற்ற உள்நாட்டு இறைவரி ஆணையாளர்,**
**மிருசுவில் வடக்கு, மிருசுவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஓம்
செல்வச்சந்நிதி முருகா!

## திருமதி நவரத்தினம் அவர்கட்கும் பிள்ளைகளுக்கும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்".

உயர்திரு. க.நவரத்தினம் அவர்கள் சிவபதம் அடைந்தார் என்ற செய்தியை மகன் யசோ கூறி அறிந்தோம். அன்று முதல் இன்று வரை அவர் எம்முடன் இருந்த மறக்கமுடியாத நாட்களை எண்ணிப் பார்க்கின்றோம். கடைசியாக நாம் யூன் 27 ம் திகதி அவரது பிறந்த நாள் அன்று கதைத்தோம். அவருக்கு சுகம் வந்துவிடும் என்றுதான் எண்ணியிருந்தோம் ஆனால் இறைவன் அவரைத் தன்னிடம் சேர்த்துவிட்டார். நாம் அறிந்த வரையில் அவர் எல்லோருக்கும் நல்லதையே செய்து நல்லவராகவே வாழ்ந்தவர். ஆகவே அவரது ஆத்மா வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.நவரத்தினம் அவர்களை நான் 1963ல் வருமானவரித் திணைக்களத்தில சந்தித்தபோது அவர் அங்கு ஒரு எழுதுவினைஞராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவர் வேலை செய்த கிளையில் தான் எனக்கும் வேலை கிடைத்தது. அவரது நற் பண்புகள் என்னைக் கவர்ந்ததால் நாம் நண்பரானோம்.

அவர் தமிழில் மாத்திரம் அல்லாது ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். இதனால் அவர் எல்லா வேலைகளையும் மிகவும் திறமையாகவும் விரைவாகவும் செய்து முடித்துவிடுவார். என் போன்ற புதியவர்களுக்கு வேலையும் சொல்லிக் கொடுப்பார். எல்லோரது அன்பையும் பெற்ற இவரை "நவா" என்றுதான் எல்லோரும் அழைப்பார்கள்.

திரு. நவரத்தினம் அவர்கள் மிகவும் விடாமுயற்சியும் ஊக்கமும் உடையவர். எல்லாப் பரீட்சைகளிலும் படிப்படியாகச் சித்தி யடைந்தார். சிரேஷ்ட எழுதுவினைஞராக, வருமானவரி உத்தியோகத்தராக, சிரேஷ்ட வருமானவரி உத்தியோகத்தராக, வரிமதிப்பாளராக, (Assessor) சிரேஷ்ட வரிமதிப்பாளராக (Senior Assessor of Inland Revenue Department) பதவி உயர்வும் பெற்றார். இவர் கொழும்பு, யாழ்ப்பாணம், அனுராதபுரம், மட்டக்களப்பு, குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள வருமானவரித் திணைக் களங்களில் வேலை பார்த்து எல்லோரது அன்பையும் பெற்றவர். 1995ம் வருடம் அரசாங்கம் Goods & Services Taxes / Value Added Tax என்ற புதியவரியை அறிமுகப்படுத்திய போது, இவ்வரியை அறிமுகப்படுத்தியவர்களில் இவரும் முக்கியமானவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய வரியை இவர் மேலும் தெரிந்துகொள்ள இவருக்கு புலமைப்பரிசில் வழங்கி Koria அனுப்பி வைத்தனர். இதனால் அவர் மேலும் சிறப்பாக கருமமாற்றினார். 1959ம் வருடம் வருமானவரித் திணைக்களத்தில் எழுதுவினைஞராக வேலையை ஆரம்பித்து 41 ஆண்டுகள் தொடர்ந்து அத் திணைக்களத்திலேயே பெயரோடும் புகழோடும் வேலை செய்து 2000ஆம் ஆண்டு சிரேஷ்ட வரிமதிப்பாளராக (Senior Assessor) தனது 60ம் வயதில் ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்பும் ஓய்ந்திருக்காது, இலங்கையிலேயே சிறந்த ஆடைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் கம்பனியான (Hirdaramani Group of Companies) இல் வரி ஆலோசகராக (Tax Consultant) வேலை பார்த்து, சுகவீனம் காரணமாக 2010ம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

திரு. நவரத்தினம் அவர்கள் மிகச்சிறந்த பல பண்புகளைக் கொண்டு விளங்கியவர். எனக்கு வேலை சொல்லித் தந்து சிங்களப் பரீட்சை, உட்பட எல்லாப் பதவி உயர்வுப் பரீட்சைகளிலும் நான் சித்தியடைவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர். நான் வரிமதிப்பாளராக பதவியுயர்வு பெற்றபோதும் பின்பு ஓய்வு பெற்று வரி ஆலோசகராக இருந்தபோதும் சலிப்படையாது பல வகைகளிலும் ஆலோசனை வழங்கி ஊக்கமளித்தவர் இன்று எம்மத்தியில் இல்லை என்பதை எண்ணும் போது ஆறாத்து யருறுகிறோம்.

**தந்தை மகற்காற்றும் நன்றி வையத்து**
**முந்தி இருப்பச் செயல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை தன் மக்களுக்கு செய்யவேண்டிய நல்லுதவி அவர்களை அறிஞர்கள் அவையில் புகழுடன் விளங்குமாறு ஆக்குவதே ஆகும். திரு.நவரத்தினம் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். அதேபோல தனது பிள்ளைகளையும் நற்பிரசைகளாக வளர்த்து பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி பொறியியலாளர் களாக்கி எல்லோரும் போற்றும் வண்ணம் வாழ வழிகாட்டிய உத்தமர். அவரது வழிகாட்டலினால் பிள்ளைகள் எல்லோரும் "இவர்களைப் பிள்ளைகளாகப் பெற்றது இவர் தந்தை பெற்ற பெறும் பேறு" என்று எல்லோரும் போற்ற வாழ்கின்றார்கள்.

நல்லதையே எண்ணி நல்லதைச் செய்து நல்லவராகவே வாழ்ந்த உத்தமர், அன்பு பண்பு கருணை கொண்ட மனித வடிவில் தெய்வமாக எமக்கு பலவழிகளில் உதவிய உத்தமர். இன்று எல்லோரையும் விட்டுப் பிரிந்துவிட்டார் என்பதை எண்ணும் போது தாங்கமுடியவில்லை. அவ் உத்தமரைப் பிரிந்து வாழும் உங்களுக்கு எவ்வாறு ஆறுதல் கூறுவது என்று தெரியவில்லை. உடலை விட்டு அவரது ஆத்மா பிரிந்த போதிலும் வான் உலகில் இருந்து எல்லோரையும் வாழ்த்திய வண்ணமே இருப்பார். அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாத் தெய்வங்களையும் வேண்டி வணங்கு கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

**அன்புடன்,**

**பாலா, விமலா, பிள்ளைகள்.**

T.BALASUBRAMANIAM,15, GLENBOURNE COURT,
HALIFAX, N S. B3S 1E2.CANADA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரல் கரணை நோய் (Liver Cirrhosis)

பல்வேறுபட்ட காரணங்களால் ஈரல் கலங்களில் இறப்பு ஏற்படுவதால் இந்நோய் நிலைமை ஏற்படுகின்றது. இதன் போது உடலின் அனுசேபத் தொழிற்பாடுகள், சில நச்சுத்தன்மையுள்ள பதார்த்தங்களை அகற்றுதல், (Nitrogen Excretion) நீர்ப்பீடனத் தொழிற்பாடு எனப் பல செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் ஈரலின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டு அது சுருக்கமடைகிறது.

**இந்நோய்க்கான பொதுவான காரணங்கள்**

- மதுபாவனை (Alcoholism)
- சில ஈரல் அழற்சி வைரசுகள் (Hepatitis B,C)
  இது தொற்றுள்ள இரத்தத்தை ஒருவருக்கு ஏற்றுவதாலோ அல்லது தொற்றுள்ள ஊசியினாலோ இன்னொருவருக்கு பரவுகின்றது.
- சில மருந்து வகைகளின் பாவனை (உ+ம் Methotrexate)
- மதுபாவனை இல்லாத ஒருவரின் ஈரல் கொழுப்புத்தன்மையாக மாறுதல் (Non Alcoholic Fatty Liver Disease). இதுவே நவரத்தினம் அவர்களை ஆட்கொண்டது. இதற்கான காரணிகளில் சில (Risk Factors), அதிகரித்த உடற்பருமன் ( Obesity), உயர் குருதி அமுக்கம் (Hypertension), நீரிழிவு நோய் (வகைII), குருதியில் கொழுப்பின் அளவு அதிகரித்தல் (Hyper Lipidaemia).

சரியான உணவுப் பழக்கங்கள், போதிய உடற்பயிற்சி மற்றும் நீரிழிவு நோயை ஆரம்பநிலையிலேயே கண்டறிதலும் அதனை சரியான கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் என்பன மூலம் மேற்கூறிய காரணிகளைத் தவிர்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈரல் நோயின் அறிகுறிகள்**

- களைப்பு, பசியின்மை
- வலது மேல்வயிற்று, வயிற்றுப் பகுதியில் வலியேற்படல்
- வயிறு வீக்கமடைதல்
- கால் கணுக்கள் வீக்கமடைதல் (Ankle Swelling )
- இரத்த வாந்தி எடுத்தல்
- மலத்துடன் குருதி வெளியேறல், மலம் கறுப்பாக இருத்தல்
- குழப்பமான பேச்சு நடத்தை (Confusion), மந்த நிலை (Drowsiness)
- கண் மஞ்சள் நிறமாக மாறுதல்

**இந்நோயினால் ஏற்படக்கூடிய சிக்கல்கள் (Complications)**

- உணவுக்கால்வாய் தொகுதியில் இரத்தக்கசிவு ஏற்படல்
- வயிற்றுக்குழியில் திரவம் சேகரிக்கப்படுதல் (Ascites)
- சிறு நீரகங்களின் செயலிழப்பு (Renal Failure)
- கிருமித் தொற்றுக்கள்
- போசாக்கின்மை
- ஈரல் புற்று நோய் (Hepato cellular carcinoma)

**சிகிச்சை முறைகள்**

இந்நோயை கண்டுபிடிப்பதற்கு ஆரம்பத்தில் ஒரு இரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது (Liver Function Test). ஆரம்ப நிலையில் இவ் ஈரல் நோய்க்கான அடிப்படைக் காரணத்தை (Underlying Cause) குணப்படுத்துவதன் மூலம் அல்லது கட்டுப்படுத்துவதன் மூலம் நோய் தீவிரமடையாமல் தடுக்க முடியும். நோய் தீவிரமான நிலையில் (End Stage Cirrhosis) உள்ள ஒருவருக்கு ஈரல் மாற்று சத்திரசிகிச்சை (Liver Transplantation) மட்டுமே தீர்வாக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசமான தந்தையாய் திகழ்ந்த அமரர் கந்தையா நவரத்தினம் அவர்கள் சுகவீனமுற்றிருந்த வேளையில் எமக்கு ஆதரவாக இருந்து பலவழிகளில் பேருதவிகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களிற்கும், எமது தந்தை நலமடைய வேண்டி சிறப்புப் பூஜைகள், அன்னதானங்கள் அளித்த செல்வச் சந்நிதி ஆலயத்தவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

தந்தையின் பூவுலகப் பிரிவை அறிந்தவுடன் ஓடோடிவந்து சகல உதவிகள் ஒழுங்குகள் செய்த உறவினர்கள் நண்பர்களிற்கும், இரங்கல் செய்தி அனுப்பிவைத்தும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியவர் களிற்கும், மலர்வளையங்கள் சமர்ப்பித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகள் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் நிகழ்த்திய அந்தணர்களுக்கும், இக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், இறுதி யாத்திரை நிகழ்வுகளில் பங்காற்றியோருக்கும் இம்மலரை சிறப்பாக ஆக்கிய ANDRA நிறுவனத்துக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

பாங்களா வீதி,
மீசாலை.
T.P: 021 227 0144

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

கந்தையா + சிவகாமியம்மை

குணரத்தினம்*
+
சிவலோகபதி

சுதாகரன்
பாஸ்கரன்
ரசிகரன்
ஜெயகரன்
சுபாஸ்கரன்
சுதர்சினி

செல்வரத்தினம்
+
செல்வபாக்கியம்*

பகீரதன்
ஜீவகன்
பார்த்தீபன்

நவரத்தினம்*

அரியரத்தினம்
+
இராசபூபதி*

நிசாந்தினி
நிதர்சன்
கிருஜன்

இரத்தினசிங்
+
கனகம்மா

சர்மிளா
ஜாமிளா
றோமிளா
கேமிளா
கோகுல
மகிணன்

யசோகரன்
+
திரிவேணி

ஓவிகா
ஜீவிகா

முரளீகரன்
+
விஸ்ணுஸ்ரீ

பிரபாகரன்
+
குகாஜினி

சுவாதிகா

**தந்தையின் சகோதரர்கள்**
பொன்னு*, வேலுப்பிள்ளை*, சின்னத்தங்கம்*

**தாயின் சகோதரர்கள்**
சரவணமுத்து*, சின்னப்பிள்ளை*, தில்லையம்பலம்*, வேலுப்பிள்ளை*

**சம்பந்தி**
நடராஜன்
பூபாலசிங்
தில்லைநா
வீரசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

சதாசிவம் + செல்வநாயகம்

த்தினசிங்கம் + கனகம்மா
சர்மிளா
ஜாமிளா
றோமிளா
கேமிளா
கோகுலன்
மகிணன்

இராஜநாயகி

ஜெயசிங்கம் + அருள்நாயகி
ஜெயஜீவா

தெய்வநாயகி + ஜெயவீரசிங்கம்
பிரதீபன்
கல்யாணி
ரமணன்

துவாரகாதேவி + ஸ்ரீஸ்கந்தராஜா
சுஜிதா
சுகன்ஜா
முகுந்தன்
சுதர்சிகா

சதாலிங்கம் + சீதாதேவி* சாந்தமலர்
சசிகரன்
நரேந்திரன்
சகானா
அகல்ஜா

பாகரன் + காஜினி
வாதிகா

உமாகரன் + கருணா
நாவலன்

லதா

ம்பந்திகள்
டராஜன் + திலகவதி
பாலசிங்கம் + கனகாம்பிகை
தில்லைநாதன் + திலகவதி
வீரசிங்கம் + சரஸ்வதி

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?



எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

A...APrinters T.P 021 2228929